ஓம்

மாணிக்கவாசகர் மாலை

ஆக்கியோர் :

கே. எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்.

PUBLISHED BY THE AUTHOR

Madras

1946

விலை
அணா 8

அணிந்துரை

மாணிக்கவாசகர் தமிழ்நாட்டிற் றோன்றிய பெரியோர். பெரியோர் பலதிறத்தினர். அவருள் ஒரு கூட்டத்தார் உலக நலனுக்கென்று ஆண்டவனால் அனுப்பப் படுவோர்; இன்னொரு கூட்டத்தார் தமது முயற்சியால் கடவுள் உண்மைகண்டு உலகுக்கு நலஞ்செய்வோர். மாணிக்கவாசகர் எவ்வினத்தைச் சேர்ந்தவர்? பின்னைய இனத்தைச் சேர்ந்தவர்.

மாணிக்கவாசகர் கல்வி பயின்றார்; அவர்க்குக் கல்வி சிவமாகியது; அவர் வாழ்க்கையில் தலைப்பட்டார்; வாழ்க்கை சிவமாகியது; தொழில் மேற்கொண்டார்; தொழில் சிவமாகியது; உலகு உயிர் சிவம் ஆகிய மூன்றையும் ஆய்ந்தார். அவை யாவும் சிவமாகவே அவர்க்குப் புலப்பட்டன. இவ் வநுபவங்களெல்லாந் திரண்டு மாணிக்கவாசகர்க்குச் சிவத்தில் சிவத்தைக்காட்டி அவரைச் சிவமாக்கின. இதுபற்றியே மாணிக்கவாசகரை, 'அறிவாற் சிவமானவர்' என்று ஆன்றோர் போற்றினர் போலும்!

மாணிக்கவாசகர் படிப்படியே அடைந்த நிலைகளையும், இறுதியில் அவரடைந்த பெருநிலையையும் அவர்தம் வரலாற்றிற் காணலாம். அவரது வரலாற்றைப் பல புராணங்கள் பகர்கின்றன. அவைகளில் மாணிக்கவாசகரின் அடைவைக் காண்டல் அரிது. மாணிக்கவாசகரின் உண்மை வரலாற்றையும் அடைவையும் உணர்த்துங் கருவி ஒன்றுளது. அஃதெது? அஃது அவராலேயே படைக்கப்பட்டது. அது திருவாசகம்.

திருவாசகம், சிவத்திற் சிவத்தைக்காட்டும் ஒருபெரும் குருபீடம் என்று சான்றோர் பலரால் விளக்கப்பட்டது.

அவருள் இங்கே குறிக்கத்தக்கவர் இராமலிங்க அடிகள். அவரால் அருளிச்செய்யப்பெற்ற திருவருட்பாவில் ஈடு படப்படத் திருவாசகத்தின் ஆழமும், நுட்பமும், பிறவும் புலனாகும்.

என் வாழ்க்கை, பல இளைஞர் நட்பைப்பெற்றது. அவருள் திரு. கே. எம். **பாலசுப்பிரமணியமும்** ஒருவர். பாலசுப்பிரமணியத்தின் நட்பு, இப்படியும் அப்படியும் ஓடி ஓடி வளைந்து வளைந்து திருவாசகத் தெள்ளமுத உறவாயிற்று.

வாழ்க்கை ஒருவிதக் கடல். அக்கடலில் பலதிற அலைகள் எழுந்து பாறைகளில் மோதுண்டு மோதுண்டு மறுகிடும். பாலசுப்பிரமணியத்தின் வாழ்க்கை, பலவிதப் பாறைகளில் மோதுண்டு அலைவுற்றது. இப்பொழுது, அலை அடங்கும் ஒருவித வாழ்க்கை அவர்பால் அரும்பி யுள்ளது. இதற்குத் துணைபுரிந்தது, சிவத்திற் சிவத்தைக் காட்டும் திருவாசகம். சிவத்திற் சிவத்தைக் காண்ப தன்றோ வாழ்க்கையின் குறிக்கோள்? இதுபற்றிய விரி வுரை ஈண்டு வேண்டுவதில்லை.

முற்பிறவியின் தவப்பயனாலோ, நல்லோர் கூட்டுற வாலோ, இயற்கை அறிவாலோ, வேறு எதனாலோ பாலசுப்பிரமணியத்தின் நெஞ்சம் திருவாசகத்தைச் சிக்கெனப் பிடிக்கும் பேறுபெற்றது. அவர்தம் நெஞ்சம் திருவாசகத்துக்கு இடமாகியது. அவரது கையில் பொலிந்த திருவாசகம் அவரது சிந்தையில் கோயில்கொண்டது என்று சுருங்கச் சொல்கிறேன்.

பாலசுப்பிரமணியத்தின் சிந்தை திருவாசகமாகியது என்பதற்குச் சான்றென்னை? அவரால் யாக்கப்பெற்ற '**மாணிக்கவாசகர் மாலை**' என்னும் இந்நூல், தக்க சான் றாக நிற்கிறது. இந்நூற்கண் மணிவாசகம் மருவுகிறது.

மணிவாசகரின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி, வாழ்வு, அன்பு, குறைபாடு, முறையீடு, அழுகை, ஆன்மநிவேதனம், சிவத்திற் சிவக்காட்சி, அடைவு முதலியன இந்நூற்கண் பரிணமித்துள்ளன. திருவாசகத்தைப்பற்றிப் பாலசுப்பிரமணியத்தின் சிந்தையில் செறிந்த எண்ணங்கள் - எண்ணங்களின் ஒலிகள் - அவைகளின் அலைகள் 'மாணிக்கவாசகர் மாலை' ஆயின என்று கூறல் மிகையாகாது.

தமிழ்மொழிக்குப் பலவிதப் பண்புகள் உண்டு. அவைகளுள் ஒன்று, தன்னில் ஈடுபடுவோர் உள்ளத்தை உருக்குவது. இப்பண்பு, பல தமிழ் நூல்களில் பொதுவாக அமைந்துள்ளது; திருவாசகத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. உருக்கத்துக்குரிய ஓர் இலக்கியம் உலகில் உண்டெனில், அது திருவாசகமன்றி வேறு எதுவாகும்?

'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்றொரு பழமொழி நாட்டில் உலவுகிறது. இஃது அநுபவத்தினின்றும் எழுந்த பெருமொழி. திருவாசகம், தமிழருள்ளத்தை மட்டும் உருக்குவதன்று. அது, வேறு மொழியினர் உள்ளத்தையும் உருக்கும் ஆற்றல் வாய்ந்தது. திருவாசகம், தன்னை ஆங்கிலத்திற் காட்டப் புகுந்த டாக்டர் போப் என்னும் கிறித்துவ அன்பரை, 'திருவாசகம் இரும்புருக்கி' என்று சொல்ல உந்தியது ஈண்டுக் கருதற்பாலது.

அன்பர் பாலசுப்பிரமணியம், திருவாசகத்தை ஓதி ஓதி, உன்னி உன்னி, அதில் ஒன்றி ஒன்றி உருகும் நெஞ்சம் பெற்றவர். அந் நெஞ்சினின்றும் பிறந்த 'மாணிக்கவாசகர் மாலை'யிலும் அவ்வுருக்கம் நிகழ்தல் வெள்ளிடைமலை.

செயல்களுள் விழுமியது எது? 'உருகுஞ் செயல்'. இது சிவத்திற் சிவத்தைக் காட்டுந் தன்மை வாய்ந்தது.

உருகுஞ் செயலை எளிதில் வழங்க வல்லது திருவாசகம். அதன் குழவியாக 'மாணிக்கவாசகர் மாலை' இலங்குகிறது என்று இயம்பவும் என் மனம் எழுகிறது. இந்நூல், தமிழ்நாட்டைப் பண்டைத் திருவாசக நாடாக்கும் என்றும் நம்புகிறேன். ஆண்டவன் அருள் புரிவானாக.

திருவாசகப் பாலசுப்பிரமணியத்தின் வாயிலாக இத்தகைய நூல் பல வெளிவருதல் வேண்டுமென்றும், அதற்குரிய வாய்ப்புக்களெல்லாம் வளர்தல்வேண்டுமென்றும், அவர்தம் முயற்சியால் உலகம் சிவலோக மாதல் வேண்டுமென்றும் அம்மையப்பனை வழுத்துகிறேன்.

திரு. வி. க.

நன்மொழி

வித்துவான் மு. வரதராசன், B.O.L., M.O.L.
(தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை)

அறிவுருவான ஒருவர் அமர்ந்திருக்கின்றார்; அவர் எதிரே அன்புருவான ஒருவர் இருக்கின்றார்; குருந்தமரம் ஒன்று இன்பநிழல் நல்குகின்றது—இந்த ஓவியமே திருவாசகம் தீட்டுவது. திருவாசகத்தை ஓதி ஓதி உணர்ந்தவர் நெஞ்சில் இத்தகைய இன்ப - அன்பு - அறிவு ஓவியம் நிலைத்திருக்கவேண்டும். கல்லால மரத்தை மறப்பித்துக் குருந்தமரத்தை நினைப்பிக்கும் திருவாசகம் எனப் பாடும் திருவாளர் **பாலசுப்பிரமணியம்** இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். அவர்தம் பாட்டில் மாணிக்கவாசகரைக் கற்றுத் தெளிந்த தெளிவும் காண்கின்றேன்; உணர்ந்து உருகிய உருக்கமும் உணர்கின்றேன்.

மு. வரதராசன்.

சாற்றுக் கவி

மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தர் ஆதினம்,
ஸ்ரீ மாணிக்கவாசகத்தம்பிரான்

கானுருங் குழல்வல்லி யுமையாளங் கயற்கண்ணி
யாகிச் சார
மானுருங் கரதலத்து மாதேவன் சவுந்தரநன்
மாறனுகித்
தேனுருந் தமிழோடு மிளந்தென்றல் நுகர்ந்தரசு
செய்தா ரென்னின்
மீனுருங் கொடியுயர்த்த வழுதியர்தம் நாட்டினியல்
விரிக்கப் போமோ. 1

அத்தகைய நாட்டிலுயர் வாதவூர் தரவந்த
அந்த ணளர்
வித்தகராய்க் கலைபலவும் தேர்ந்திருந்தும் அமைச்சுநெறி
மேவி வாழ்ந்தும்
சித்தவிகா ரக்கலக்கந் தெளிவித்துச் சிவமாக்கித்
தன்னைப் பேணும்
உத்தமனும் தேசிகனைக் காணுமுய ரேசறவே
ஓங்கப் பெற்றார். 2

வாம்பரிகள் வாங்கவென மன்னவனு ராணைதர
மதித்துட் கொண்டு
போம்பொழுதில் மலமாயை கன்மமெலாந் தொலையவரும்
பொழுது நோக்கித்
தாம்பொருவில் சீடரொடும் எழுந்தருளித் தனிக்குருந்தி
னிழற் றங்கி
ஏம்பலறச் சின்மயநன் முத்திரையா லெங்கள்பிரான்
இனிதாட் கொள்ள. 3

வேதகத்திற் பொன்னுன இரும்பென்னத் தற்போதங்
கழன்று மேவித்
திதறியாச் சிவபோதந் தனைவிழுங்கச் சிவானுபவ
வெள்ளத் தாழ்ந்து
போதறியா தனுபவித்த ஆனந்தப் பெரும்புணரி
பொங்கிற் றென்னக்
கோதகன்ற மாணிக்க வாசகமாய்க் கொழித்தபிரான்
றாள்கள் போற்றி. 4

அத்தகைய பெருமான்றன் மலர்வாயின் வாசகத்தே
னமுத மாந்தி
மெய்த்தன்மை வாசகமே தானாகி நாடோறும்
விரும்பி யோதி
அத்தனார் பெருந்துறையை அடைந்துமணி வாசகர்முன்
னழுது நின்றே
சித்தநிகழ் திவினையே னினைப்பாட அருளென்னச்
செப்பித் தாழ்ந்து. 5

மாணிக்க வாசகர்தம் மாலையென ஒருமாலை
மாண்பிற் சாற்றிக்
காணிக்கை யெனஅந்த பெருமான்றன் கழலிணைக்கே
கருதித் தந்தான்
மாறுற்ற ஆங்கிலநன் மொழிவல்லான் **பாலசுப்ர
மணிய** னென்பான்
ஏறுற்ற பெருநண்பன் எமக்கெல்லாம் எண்ணுதோ
றினியன் கண்டீர். 6

வாசகத்தின் பொதுமையினை உட்பிரிவைப் பெருமையினை
வகுத்துக் கூறி
ஆசகன்ற அனுபவத்தைப் பெறவிழையும் வேண்டுகோ
ளடைவிற் கூறி
ஈசனென ஒப்புயர்வி லாதசெழுந் தமிழ்மொழியி
னினிதிற் கோத்த
தேசுமலி சதமணிநன் மாலையது தமிழ்போலச்
சிறப்புற் றோங்க. 7

தொண்டர்கள்தம் வரலாற்றுச் சமுதாய சீர்திருத்தம்
தோன்றக் கூறி
எண்டிசையும் புகழ்ந்தோத எதிர்ப்பாளர் வாயடங்க
எடுத்துக் காட்டும்
திண்டிறல்சேர் திருவாளன் வாழ்கஅவன் சிந்தையிடை
மூண்டெ ழுந்த
தொண்டுநெறி மண்டிமிகு தொல்லுலகெல் லாம்பரவி
வாழ்க மாதோ. 8

—**மாணிக்கவாசகன்.**

தோற்றுவாய்

சுமார் பதினைந்தாண்டுகட்கு முன்பே திருவாசகத்தின் முதற்கண் திகழும் 'சிவபுராணம்' அடியேனுக்கு மனப்பாட மாகியிருந்தது. அந்நூலில் அதைத் தவிர வேறொரு பாடலும் அடியேன் அப்போது அறிந்திலன். எனினும், அச்சிவபுராணம் என்னும் பகுதியை யான் பற்பலமுறை பாடிப்பாடிச் சுவைத்துச் சுவைத்துப் பயன் அனுபவித்ததுண்டு. அரசியற் சூழலிற் சிக்கி அலைவுற்ற ஞான்றும் திருவாசகத்தின் அப்பகுதியைப் பெருவாசகமெனவே பேணிப் பயின்று பெரிதும் இன்பம் துய்த்துள்ளேன். எனவே, புறத்தோற்றத்திற்குச் சமயப் புறம்பானவனுய்த் திரிந்தகாலத்தும், "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன், தமிழோடிசை பாடல் மறந்தறியேன், நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன், உன்னுமம் என்நாவில் மறந்தறியேன்" என்னும் அப்பர் பெருமான் அருள்வாக்கு அடியேன் சிறு வாழ்விற்கும் அமைவதாயிற்று. அத்தகைய சிவசிந்தனைக்கு அடிகோலியதும் அடியேன் அறிவிற் சிவத்தை ஓரளவுக்கேனும் புகுத்தியதும் திருவாசகத்தின் 'சிவபுராணமே'யாகும்.

சமீபத்தில், சுமார் ஆருண்டுகட்கு முன்னர் மீண்டும் அத்திருவாசக வேட்கை என்வயின் மூளலாயிற்று. இதற்குள்ள பல காரணங்களுள் முக்கியமானது அடியார் குழுவில் அடியேன் கலந்ததேயாகும். பெரியார்கள் சிலரின் அறுபதாவதாண்டு விழா சென்னை நகரில் பீடுற நிகழ்ந்த காலை, என் நல்வினைப்பயனுய் அடியேன் அவ்வைபவங்களில் கலந்துகொள்ளும் பாக்கியம் பெற்றேன். அந்தத் தொடர்பால் விளைந்த அரும்பயன் அடியேற்குத் திருவாசகத்தில் மீண்டும் அரும்பிய ஆர்வமேயாகும். அதன்பின் இடையிடையே அதைப் படித்துவரினும், அதனிடம் உறுதி

யும் உண்மையும் வாய்ந்த உறுபயன் அடைதற்கு அடியேன் முனைந்துநிற்க முடியாமற் போயிற்று. ஆனால் 1945-ஆம் ஆண்டுமுதல் திருவாசகத்தில் அடக்கமுடியாத தோர் ஆர்வமும் மோகமும் என்னிடம் தோன்றலாயிற்று. அதன்பயன், திருவாசகம் முழுவதையும் அடியேன் மனப் பாடம் செய்ததேயாகும். திருவாசகம் என்னும் தேன், என் ஊன், உயிர், உணர்வு, உள்ளம் முதலியவற்றில் கலந்து கலந்து, "புன்புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென், என்பெலாம் உருக்கி" இன்பம் பயக்கலாயது.

3-5-46 அன்று அடியேன் மணிவாசகப் பெருமானார் சிவபிரானால் ஆட்கொள்ளப்பட்ட அருந்தலமாகிய திருப் பெருந்துறையில் அமர் சிவனைக் கண்டுகண்டுள்ளம் களித் துக் கவின்தரும் அருளிற்குளித்துக் கரையிலாப் பேரின்பம் நுகர்ந்தேன். அப்போது மணிவாசகப் பெருமானை யான் வேண்டிய வரம் ஒன்றே ஒன்று. அதுதான், அவர்மீது மாலையொன்று பாட அடியேற் கருள்ல்வேண்டு மென்பது. என் குருநாதன் "வேண்டத்தக்கதறிவோன், வேண்ட முழுதும் தருவோன்" ஆகலின், அதன்பின் ஒருவாரத்திற் குள்ளாக இம் மாணிக்கவாசகர் மாலை என்னும் நூலை, அடியேன் ஒருவாறு எழுதி முடித்தேன். இந்நூல் எழுதப் பட்ட தலம் தஞ்சை. குழந்தை, தன் தாயைக் கொச்சை மொழியால் குழைந்து குழைந்து புகழ்வதும் இயற்கை யன்றோ? அதே நிலையில்தான் அடியேனும் என் மணி வாசகனாரை 'ஆதரித்துப்' பாடியுள்ளேன் இச்சிறிய நூலில்!

இந்நூலின் உயர்வுதாழ்வு பாராது, இதற்கு மூலமா யிருந்த திருவாசகத்தின் சிறப்பையும் அதனைப்பாடிய மணிவாசகனாரின் சிவத்தையும் மட்டுமே கருதி, அடியேனை

மேலும் மேலும் ஊக்குவிக்கும் எண்ணத்துடன், 'அணிந்துரை' ஒன்று அருளுடன் உதவிய ஐயா, திரு. வி. க. அவர்களைப் பணிந்து நன்றிபகர விழைகிறேன். சிதறுண்ட அடியேனின் சிறு வாழ்க்கையிலும் செப்பம் காணவும் சிறப்பினை யாக்கவும் சிந்தைவைத்துள்ள பெரியார் இத் தமிழ்நாட்டில் அவர் ஒருவரேயாவர். 'யாவர்க்கும் கீழாம் அடியேனை'யும், "அவர் மாணிக்கவாசகர் ஆகிவிட்டார்" என்று அவர்களது அருள்வாக்கு அன்றொருநாள் கூறிய அருமையால்தான், அடியேன் இன்று மாணிக்கவாசகரின் மாணவனுனேன் என்றுல் மிகையாகாது. அவர்களுக்கு அடியேன் என்றென்றும் கடப்பாடுடையேன்.

மற்றும், என் ஆருயிர் நண்பரும், அருள்நெறியில் நிலைநிற்கும் ஆற்றல் உடையாரும் ஆகிய (மதுரை, திருஞானசம்பந்தர் ஆதீனம்) ஸ்ரீமாணிக்கவாசகத் தம்பிரான் அவர்களும், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. மு. வரதராசன் அவர்களும் இந்நூலுக் களித்துள்ள சாற்றுக்கவிக்கும், நன்மொழிக்கும் முறையே என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்னை
26—9—46

கே. எம். பாலசுப்பிரமணியம்

ஓம்



மாணிக்கவாசகர் மாலை

திருமலிந்த தண்டமிழும் தேனும் பாலும்
தேக்கியுண்ட பாக்கியத்தில் திகழ்ந்தெந் நாளும்
மருமலிந்த உரைமலியும் மாண்பின் மிக்கோர்
வையமெலாம் மதித்தபுகழ் மாந்தர் வாழ்ந்த
உருமலிந்த பல்வளமார் ஊராம் வாத
வூர்தனிலிவ் வுலகமதும் உவப்பத் தோன்றிக்
குருமலிந்தஞ் செழுத்தைமுதற் கோத்து மாலை
கொடுத்தனைநல் மணிவார்த்தைக் கோவே தேவே.

தில்லைஎனும் எழில்அருளும் தேங்கும் சோதிச்
சிற்சபையில் நடனமிடும் தேவன் தன்னை
எல்லையறும் பிரமையுடன் ஏய்ந்து போற்றி
எம்பெருமான் அருளுதியென் றேத்திப் பாடிக்

கல்லைநறுங் கனியதுசெய் காதல் தீஞ்சொல்
கழறினை நன் மதுரையில்அக் காலத் தீசன்
கொல்லுநரி பரியெனவும் கூட்டிச் சேர்த்த
குறிப்பறியும் மணிவார்த்தைக் கோவே தேவே. 2

அண்டமெலா மொருநொடியில் ஆக்கிப் பின்னர்
அணுவதிலும் சிறுவணுவில் ஆர்ந்தெந் நாளும்
மண்டுசரா சரங்களவை வளர்த்துக் காத்து
மாய்த்துநிதம் மகிழ்ந்துவிளை யாடு மன்னன்
பண்டுனது பாசவினைப் பாரம் தீர்த்துப்
பல்லுலகும் காணவருள் பாலித் தானுல்
கொண்டுதமிழ் அமுதமதைக் குழைத்துக் கூவிக்
கொடுத்தனை நீ மணிவார்த்தைக் கோவே தேவே.

நான்எனதென் உரைமாய்த்து நான்கு வேதம்
நன்கறியா மலரடிகள் நாளும் போற்றித்
தேன்மதுரம் பொழிதமிழைத் தேனித் தாடித்
தென்றிசைசேர் தலமலியும் தில்லை சேர்ந்தாய்
மான்மழுவின் கரமொளிரும் மகிபன் உன்றன்
வாசகத்தேன் தமிழ்க்கவியை வலிந்து தீட்டக்
கோன்மகிழ்சிற் சபையதனிற் குழைந்து வாழ்ந்தாய்
கோமளமே மணிவார்த்தைக் கோவே தேவே. 4

மெய்யுணர்வால் உளம்நிறைந்து மேலிட் டோங்கி
மெய்யரும்பி விதிர்விதிர்த்து விரும்பி யோடிக்
கையிரண்டும் சிரம்குவித்துக் கண்ணீர் வெள்ளம்
கசிந்துருகி யுடல்வழியக் கம்பித் தாடிப்
பையரவம் புனையும்எழிற் பரமன் தன்னைப்
பைந்தமிழைப் புனைந்திசையும் பாடிப் பாடிக்
கொய்யுமலர் பறித்திறைஞ்சிக் கொண்டாய் ஈசன்
கோதிலடி மணிவார்த்தைக் கோவே தேவே. 5

நாடகத்தால் அடியர்எனும் நல்லார் போன்று
நாட்டகத்து நடித்தடியன் நாளும் கூடி
வீடகத்தே புகுந்திடவும் விரைந்திட் டாலும்
மிகுந்திடுமுன் திருவருளின் மேன்மை யில்லேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே அம்மான் என்றே
ஆரமுதத் தமிழ்குழைத்திட் டாடிப் பாடிக்
கூடரிய சிவனடியிற் கூடி வாழ்ந்தாய்
கோமகனே மணிவார்த்தைக் கோவே தேவே. 6

"வெள்ளந்தாழ் விரிசடையன் விடையன் விண்ணோர்
வேந்தன்எனச் செவிமடுத்து வேட்பக் கேட்டும்
பள்ளந்தாழ் உறுபுனலிற் பாய்ந்திட் டோடிப்
பதைத்துருகிப் பணிதலறும் பாவி யேனின்
உள்ளந்தான் புகுந்திருளை யோட்டுஞ் சோதி
உத்தம"என் றுரைசெயுன தூற்றின் பாடல்
கொள்ளுந்தேன் பருகியுயிர் கோதும் தீரக்
கூடினன்காண் மணிவார்த்தைக் கோவே தேவே.

ஆடுகின்ற நடம்பயிலும் ஆர்வத் தானை
அணிமொழியின் மறைகளறிந் தாரா தானைப்
பாடுகின்ற நியதியுடன் பாடிப் போற்றிப்
பணிசெயடி யவர்கள்மனம் பாவித் தேத்தி
நாடுகின்ற முனியரச ! ஞானி யாரும்
நானிலமும் அமருலகும் நாளும் போற்றிக்
கூடுகின்ற பெருமைமிகும் குணக்குன் றேஎன்
கோமளமே மணிவார்த்தைக் கோவே தேவே. 8

இருகரங்கொண் டெழின்மலர்கள் ஏத்தித் தூவி
இயம்பரிய இனிமையுடன் ஈசன் றுளில்
பருசிரங்கள் அவைபதித்துப் பாடிப் போற்றும்
பழவடியர், "நறும்பாலின் பாகின் தேனின்

உருசிவிளங் கொருகனியே, ஓடும் வெள்ளத்
துணர்வெனுநற் புனல்சுரக்கும் ஊற்றே" என்றும்
"குருசிகையின் மணி"என்றும் கூறிப் பாடும்
கோமளமே மணிவார்த்தைக் கோவே தேவே. 9

"ஈசஅருள்" எனஉலகம் ஏத்தும் தூய
எம்பெருமான் இணையடிகள் ஈட்டற் குன்றன்
நேசமுறும் கடலமுதம் நிகர்த்த தேனை,
நேர்ந்ததிரு வாசகமாம் நெய்யைப் பாலைப்
பாசமறப் பருகுதலிப் பாரோர் நீதிப்
பான்மைமுறை எனக்கொளநற் பாங்கின் உத்ர
கோசமங்கை தனிலுறையும் கூத்தன் பாதம்
கூடிநின்றாய் மணிவார்த்தைக் கோவே தேவே. 10

"தருக்கதனை யொழித்துனடி தஞ்சம் சார்ந்தேன் ;
தரிக்ககிலன் இழிவுடலம் தாங்கும் வாழ்க்கை ;
உருக்கியெனைப் புகுந்தடியன் உள்ளந் தோன்றி
ஒளிசுடரின் நனிவளரும் ஓங்குஞ் சோதி
பெருக்கியருள் செயவருதி பெம்மான்" என்று
பிறைச்சடையன் தனைப்பணிந்த பீடு சார்ந்த
குருத்திலகம் எனத்தரணி கூவிப் போற்றும்
கோமகனே மணிவார்த்தைக் கோவே தேவே. 11

"புணர்ப்பதென அடியன்எனைப் பூண நோக்கிப்
பொழிந்தருள்செய் புனிதஅருட் போதா" என்று
மணப்புதுசெங் கமலமலர் வதன மாதை
மணந்தசிவன் பதமடைந்த மாண்பின் நாத
உணர்த்தியுனக் கரனுரைப்ப ஓங்கும் வார்த்தை
ஒன்றதனை அடியன்எனக் கோதல் செய்தி
குணக்குருவைக் குருந்தநிழற் கூடிச் சார்ந்து
குறிப்பறிந்த மணிவார்த்தைக் கோவே தேவே. 12

"விச்சைமிகச் செய்திடுநல் விகிர்தன்" என்றும்
"வித்துமின்றி விளைவுசெயும் வினைஞன்" என்றும்
இச்சைமிகத் தமிழ்மொழியில் இனிமை கோத்தும்
இசைவகுத்தும் புகழ்மிகுத்தும் ஈரப் பாடல்
செச்சைமலர்த் திருவடியின் சிவனை யேத்திச் [செய்
சிறந்தளித்திட் டறந்தழைக்கச் செய்தாய், யான்
கொச்சைமொழிப் புகழ்தனையும் குணமென் றேற்றுக்
கொண்டருளாய் மணிவார்த்தைக் கோவே தேவே.

"மாறிநின்று மனமதனை மயக்கும் ஐந்து
மாண்பழிந்த புலன்கள்தமை மாற்றிக் கூடி
ஊறிநின்றென் உளமதனில் ஓடுந் தேனென்
றூற்றெடுத்துப் பிறங்கியொளிர் ஓங்கும் சோதி
நீறிருந்த திருவுருவை நெகிழ்ந்து காட்டி
நீளடிமை எனக்கருளும் நேசா" என்று
கூறிநின்றே அரனடியைக் கூடிப் போற்றிக்
கொண்டிருந்தாய் மணிவார்த்தைக் கோவே தேவே.

"கடையன்" என உலகம்எனைக் காய்ந்திட் டாலும்
காதலவர்க் கருள்புரிகங் காளர் என்னும்
விடையவனை விழுப்பொருளை வேதம் போற்றும்
வித்தகன்என் றடியர்புகழ் விருப்பி னானை
அடையுமனத் துடனடியன் ஆர்ந்துன் பாதத்
தரும்புணையை விரும்பினன்நல் லருட்பண் டாரக்
கொடைமலியும் வளமுடைய கோமான் தாராய்
கோமளமே மணிவார்த்தைக் கோவே தேவே. 15

ஆதியொடு நடுவிறுதி யானான் தன்னை
அம்பலத்தே திருநடனம் ஆடுங் கோனைச்
சோதியுரு வதுவெனமுன் தோன்றிட் டானைத் [ப்
தொண்டர்மனத் திருக்கோயில் சூழ்வான் தன்னை

பாதிமதி யணிபவனைப் பாரில் நேரில்
பண்புடனே கண்களுறப் பார்த்தும் வாழ்வின்
கோதறவே அவனடியிற் கூடிச் சார்ந்த
கோமளமே மணிவார்த்தைக் கோவே தேவே. 16

அடியவர்தம் தொகைநடுவில் ஆர்ந்தெந் நாளும்
அகங்கனிந்து முகம்பிறங்கி யாடிப் பாடிப்
படியதனில் கடவுள்சிவன் பாதத் தேனைப்
பருகினினி யுருகியுளம் பாங்கின் வாழ்ந்து
முடியரசர் முதலுலகம் முழுதும் போற்றி
மூண்டுபணி செயவிருந்த மூவாச் செல்வ!
குடியமுதத் தமிழ்ப்பிரசம் கொழிக்கும் பூவே
குணமிகுநல் மணிவார்த்தைக் கோவே தேவே. 17

மங்கையர்தம் விழியுறத்தன் மையல் சார்ந்து
வளையல்விழக் கலையவிழ மயக்கும் மேனிச்
சங்கரனார் தரித்தமலர் தானும் சூடித்
தையலர்போல் நையவுளம் தவித்தெந் நாளும்
துங்கமுறும் பிரமையுடன் தோளும் கூடத்
துடித்ததரம் சுவைத்திடவும் சோர்ந்திட் டீசன்
கொங்கலரின் திருப்பதங்கள் கூடிச் சார்ந்தாய்
கோமளமே மணிவார்த்தைக் கோவே தேவே. 18

" கலைமலிசெய் கண்ணப்பன் காட்டுங் காதல்
கடையன்என நிடமின்மை கண்ட பின்னும்
நிலைமலிசெய் அற்புதந்தான் நிகழ்த்திப் பாரில்
நீளுருவம் மகிழ்ந்தெனக்கு நேரிற் காட்டும்
அலைமலிசெய் நதிக்கங்கை யணியும் வேணி
அரன் "எனவும் பரவுதமிழ் ஆளி நாத
கொலைமலிமுப் புரமெரித்த கூத்தன் தாளின்
குணம் புகழ்ந்த மணிவார்த்தைக் கோவே தேவே

இருக்கார்வத் துடன்பணியும் ஈசன் தன்னை
ஏந்திழையார் உளமலியும் இனிய காதற்
பெருக்காகும் பிரமையுடன் பேணிக் கூடிப்
பேசரிய வின்பநுகர் பெருமைத் தான
திருக்கோவை யெனுஞ்சிறந்த தெய்வப் பாடல்
திளைத்துருகி யுரைத்தருளித் தேர்ந்த நின்னைக்
குருக்கோலத் துருவதனிற் குறித்து நாளும்
கூடிடுவேன் மணிவார்த்தைக் கோவே தேவே.20

நன்றேசெய் வாய்பிழைசெய் வாயென் நாத
நானிதற்கு நாயகமோ, நாயென் ஆவி
என்றேகம் இவையுன்வசம் இருத்தி நாளும்
ஏய்வதன்றி யாய்வதனுக் குரிமை யில்லேன்
அன்றேஎன் றனைநீயும் ஆண்டு கொண்ட
வதனால்என் றரன்சரணம் ஆர்ந்து நீதான்
கொன்றேயுன் மரணம்பிறப் பிரண்டும் கூடிக்
கோதகன்றாய் மணிவார்த்தைக் கோவே தேவே.

தொழுதஎனக் கந்தமிலா தேங்கும் தூய
சுகம்பெருக்கும் இன்பமதைத் தோற்றி நீதான்
பழுதடியன் எனையாண்டும் பயன்என் பாலே
படைத்ததுவென் இறைவவுரைப் பாய்என் பா
அழுதடைய லாகும்உனை அடியர் நாளும் [னே
அரகரசங் கரவெனவே அருளித் தொண்டர்
குழுவினுடன் பெருந்துறையிற் குருவை நாடிக் [வே.
கொண்டடைந்தாய் மணிவார்த்தைக் கோவே தே

நெஞ்சுருகும் அடியவர்கள் நிறைந்த கூட்டம்
நெருங்கியுற நினதருளை நிதமும் தாராய்
குஞ்சுகளின் குறையுணரும் கோழி போலென்
குறையகற்றி விரும்புமவை கொடுக்கும் தாயே

அஞ்செழிலின் எழுத்தறிவித் தாண்ட நாத,
அடித்தடித் தக்காரமதை யடியற் கூட்டும்
கொஞ்சுமொழி யுமைகணவ எனவும் கூவிக்
கோதகன்றாய் மணிவார்த்தைக் கோவே தேவே.

நவிலுகின்ற திருவார்த்தை "நமச்சி வாய
நனிவாழி" எனுஞ்சிவபு ராணம் நாட்டிச்
செவியமுதக் கீர்த்தித்திரு அகவல் தீட்டித்
திருவண்டப் பகுதிதனைத் தேர்ந்து பாடிப்
புவியிலுறு மனிதர்நிலை போதித் தூட்டும்
போற்றித்திரு அகவல்தனைப் புகன்று போற்றிக்
குவிகரங்கள் கூட்டியரன் குணங்கள் பாடிக்
கூடியவா மணிவார்த்தைக் கோவே தேவே. 24

திருச்சதகம் எனும்பகுதி தெளிந்து கூறிச்
செழுந்தேனைப் புரையும்அருள் சேர்ந்த நூறு
அருச்சனைக்கொத் திடுசெய்யுள் அமைத்துப் பாடல்
ஐம்பதனுள் உயிர்நீத்தல் ஆகும் எண்ணம்
உருச்செறியும் விண்ணப்பம் ஓதி யீந்தும்
ஓங்குதிரு வாசகத்தை யுவந்து பாடிக்
குருச்செறிந்த குருந்தநிழற் கூடிச் சேர்ந்து
குழைந்தனைநல் மணிவார்த்தைக் கோவே தேவே.

நம்பாவென் றிடுபெயரின் நாதம் கேட்டு
நக்கமுதும் உளமுருகி நைந்தெந்நாளும்
வெம்பாகண் புனல்பெருக்கி விழித்துப் பொய்கை
வீழ்ந்துநனி மார்கழிநீர் விழைந்திட் டாட
எம்பாவை தனைவிளித்தும் ஈசன் நேசம்
எவ்வுயிரும் அறிந்துணர இயைந்து பாடிக்
கொம்பாரும் உமைகொழுநன் கூத்தன் பாதம்
கூடிநின்றாய் மணிவார்த்தைக் கோவே தேவே. 26

"அங்கையினில் அழல்தழைக்க ஆடும் கூத்தன்
அரனவர்க்குப் பாடுதுங்காண் அம்மா னாய்" என்
றிங்கிதமும் செழுந்தமிழில் எழிலிற் பாடி.
எங்களையாட் படுத்தியெம்முள் ஈசன் பாதம்
தங்கியுற அருளினைகொல் தாவில் தொண்டர்
தனித்தலைவ, இனித்தபுகழ் தாங்கும் நாத,
கொங்குமலர்த் திருவடிகள் கூத்தன் கூவிக்
கொடுத்தருளும் மணிவார்த்தைக் கோவே தேவே.

"வையகமும் உரலதென வாய்ப்ப வோங்கும்
மாமேரு மலையுலக்கை மாண்பிற் றாகக்
கையகமும் சிவப்பமஞ்சள் கலந்து தாங்கிக்
காதல்மிகு மடந்தையரும், கசிந்து பாடும்
மெய்யகத்தின் 'அடியவரும் மின்னு பொன்னின்
மேவுசுண்ண மிடித்தலுக்கு மேவீர்" என்று
கொய்யுமலர் பொழிந்துபுகழ் கூறிக் கூறிக்
கூடினையால் மணிவார்த்தைக் கோவே தேவே. 28

"தேனுறையு மலர்களவை தேடித் தேர்ந்து
தினைத்தனையென் றுளதேனைத் திளைக்கும் தும்பீ!
ஊனுறையுந் துகளறுத்திட் டுன்னுந்தோறும்
உரைக்குந்தொறும் கேட்குந்தொறும் உவகை கூட்டும்
மானுறையும் கரத்தரனின் மடித்த தாளின்
மலர்ப்பிரசம் தனைத்திளைத்தி மகிழ்ந்"தென் றோதிக்
கோனுறையும் பெருந்துறையில் கூடிப் பாடிக்
குழைந்திருந்த மணிவார்த்தைக் கோவே தேவே.

" தான்கெடுதல் அமைதலறும் தாதை தாள்கள்
தமைநினைந்தென் உயிர்உளமும் தாங்கெட் டேக
நான்கெடுதல் உறுவகையும் நயந்து பாடி
நனிதிருத்தென் ளேணமதை நாம்கொட் டாமோ

டான்மொழியின் மகளிர்இவண் பாடி வம்மின்
பணிந்திடுமின்" எனவருளிப் பாங்கி னேடும்
கோன்மகிழும் வாசகத்தைக் கூறிப் பாடிக்
கூடிநின்ருய் மணிவார்த்தைக் கோவே தேவே.30

ஊன்புகுந்து குருதிபயில் ஒளியின் வேலும்
உடுக்கையுங்கொண் டழித்துலகை யோங்கு காளி
தான்புகுந்த திருத்தில்லைத் தலத்திற் கூடித்
தத்துவனூர்த் துவம்நடித்துச் சகத்தைக் காத்த
பான்மைதனை யருஞ்சாழல் பாடிப் பின்னும்,
பரம்பொருளின் திறம்பலவும் பண்பிற் பாடிக்
கூன்பிறையைச் சடைக்கணிந்த கூத்தன் பாதம்
கூடினையால் மணிவார்த்தைக் கோவே தேவே.31

" வணங்குதற்குத் தலைதனையும் வைத்திட் டீசன்
வார்கழல்கள் வாழ்த்திடவென் வாயும்வைத்தான்
இணங்குதற்குச் சிரடியார் ஈட்டம் வைத்தான்
எம்பெருமான் எனவிறைஞ்சி ஏத்தி நாமும்
அணங்கொடணி தில்லையுளே யாடும் நாதன்
அடிபணிந்து பூவல்லி யதனைக் கொய்வாம்
குணாங்களுற அடைமின்"எனக் கூவிப் பாடும்
கோமளமே மணிவார்த்தைக் கோவே தேவே. 32

" வேறுபட்ட திரிபுரங்கள் வேவத் தீய்த்து
வெள்ளெயிற்றின் நகைகாட்டி விளங்கு மீசன்
நீறுபட்ட உருவமதை நினைந்து பாடி
நித்தமும்உந் திபற"வென் றீசன் நேசம்
தேறுதமிழ் அருளியநின் தெளிவைக் கண்டும்
சித்தமெலாம் பத்திரசம் திளைத்திட் டோமே
கூறதனில் அணங்குடைய கூத்தன் பாதம்
கூடியுறை மணிவார்த்தைக் கோவே தேவே. 33

" உரையகன்ற உள்ளொளியின் ஒருவன் கூட
ஒளித்திருந்த இந்திரியப் பறவை யோடத்
துரையகன்ற வகைதனையும் தொழுது பாடித்
தோணோக்கம் ஆடாமோ சொல்லீர்" என்றும்
"புரையகல்பொன் திருவுருவப் புகழும் பாடிப்
பொன்னூசல் ஆடாமோ புகலும்" என்றும்
குரைகடலின் அமுதமெனக் குழைத்த தீஞ்சொல்
கூறியவா மணிவார்த்தைக் கோவே தேவே. 34

" ஆடரவப் பூணதனை யணிந்த மேனி
யதிற்றிகழும் திருநீற்றின் அழகுக் கோல
வேடத்தைக் காணவுளம் விழைந்து வாடும்
விந்தையெனே அன்னேநீ விளம்பாய்" என்றும்
"மாடமலி பெருந்துறையின் வள்ளல் தன்னை
'வருதி'என இளங்குயில்நீ வாழ்த்தாய்" என்றும்
கூடுபுகழ் வாசகமும் கூறிக் காதல்
கூடினையால் மணிவார்த்தைக் கோவே தேவே.35

"எராரு மிளங்கிளியே, எங்கள் நாதன்
இனியபெயர் இயம்பிடுதி" என்றும் பாடிப்
"பாராரு முனைப்பணியப் பரிந்து நீயும்
பள்ளிஎழுந் தருளுதிநற் பரம" என்றும்
ஆராத மயல்பெருக ஆடிப் பாடி
யகங்குழைந்தும் அந்தணனாய் ஆளுங் கொண்ட
கூரார்ந்த மழுப்படையெங் கோனைப் பாடிக்
குறிப்புணர்ந்த மணிவார்த்தைக் கோவே தேவே.

முடியாத முழுமுதலை மூண்ட கோயில்
மூத்ததிருப் பதிகமதில் முனைந்து பாடிப்
படியாரும் திருக்கோயிற் பதிகத் தாலே
பரந்தபட ரொளியெழிலைப் பரிந்து கூறிச்

செடியாரும் உடல்சிதைத்துச் சிவனைச் சேரச்
செத்திலதாம் பத்தததனைச் சிறந்து திட்டிக்
கொடியாரும் உமைகொழுநன் கூடக் கூடிக்
கொழித்திருந்த மணிவார்த்தைக் கோவே தேவே.

“அடைக்கலமுன் அடிக்கமலம், ஐயா” வென்றும்
“அஞ்சலென நின்னெழில்வாய் அலர்ந்து கூறிக்
கடைக்கடியன் எனக்கருளிக் காதல் காட்டும்
கவின்காண ஆசையுளேன் காவாய்” என்றும்
“நடைக்கூடத் துடல்மலியும் நாயி னேனை
நயந்தாண்ட அதிசயத்தை நாடீர்” என்றும்
குடைக்குருந்தின் அடியிருந்த கோமான் பாதம்
கூடிநின்ற மணிவார்த்தைக் கோவே தேவே. 38

“ஊற்றுமணல் எனப்பெருகி யுள்ளந் தானும்
உருகிநெகிழ்ந் தோலமிட் டோடி நாயேன்
போற்றிநிற்ப தென்றுகொலோ புணர்ந்திட் டீசன்
பொல்லாநன் மணிப்புனிதன் பொற்றாள் !” என்
“ஏற்றியெனை நினதடிக்கிங் கேக வைத்தி [றும்
ஏழையனேன் வாழ்கிலன்காண்” என்றும் பாடிக்
கோற்றேனின் திருவார்த்தை குழைந்து கூறிக் [வே.
கொழித்தஅருள் மணிவார்த்தைக் கோவே தே

“ஆதரித்துன் றனையரற்றி யழைக்குங் காலே
ஆசையொட தெந்துவென்றே யடைநி” என்
“காதிருந்த குழையினுடன் கழுக்குன் றூர்ந்து [றும்,
காட்டினையுன் கழலிணைகள் கனிந்திட்” டென்றும்
“நாதரிங்கு நடம்புரியும் நன்மை கண்டேன்
நலமலிசெய் திடுந்தில்லை நண்ணி” என்றும்
கோதறவும் குழகனடி கூறிச் சேர்ந்தாய்
கூடுபுகழ் மணிவார்த்தைக் கோவே தேவே. 40

பேணுதிருப் பெருந்துறையிற் பிரிந்த தோதிப்
ப்ரார்த்தனைமெய்ப் பத்ததனைப் பெரிதும் பாடி,
வேணுமதை யடியவர்க்கு விரும்பி யீயும்
வேந்தனையும் குழைத்தபத்து விரும்பிப் பாடி
"நாணுமிந்தக் கடையவனும் நலிந்தி டாமல்
நாடியுயிர் உண்டி"டெனும் நலமும் பாடிக்
கோணுபிறைச் சடையன்கழல் கூடிக் காதல்
கொழித்ததிரு மணிவார்த்தைக் கோவே தேவே.

இறைவனடிப் பிரமையுடன் எழில்வெண் ணீற்றை
இனிதணிந்துள் ளுருகிநனி இளகிக் கண்ணீர்
நிறையவிழச் சிவனுருமுன் நில்லா தாரை
நீசரைஎன் உளமதஞ்ச நேரும்" என்றும்
பிறையணிசெய் யிறைவனடி பேணும் பாண்டிப்
பெரும்பதிகம் அரும்பியுளம் பேசா நின்றும்
குறைவிலருள் தனைக்கூடிக் கோலங் கொண்டும்
கொழித்திடுநல் மணிவார்த்தைக் கோவே தேவே.

"உம்பர்களுக் கரசவுனை ஒய்வில் லாதும்
உரைத்தெளிதிற் சிக்கென யான் உறுதிப் பாடாய்
எம்பொருட்டுப் பிடித்திடவும் இனியும் நீஎங்
கெழுந்தருளல் இயையு"மென ஏத்தி நின்றும்
செம்பொருளின் வேசறவைச் சிறந்து பாடித்
திருப்புலம்பல் ஆரூரிற் சேர்ந்து தீட்டிக்
கும்பமுலை யுமைகொழுநன் கோனைக் கூடிக்
கோதறுநல் மணிவார்த்தைக் கோவே தேவே. 43

"ஆரமுதச் சுவையருளை யளித்திட் டென்னை
அரனருளும் அற்புதம்யான் அறியேன்" என்றும்
"ஓரருளின் சிவன்கழலைச் சேர்ந்தென் சென்னி [றும்
திகழும்அருள் திளைத்திடுங்கொல்சிறந்திட்"டென்

"பேரருளை யுடையசிவன் பேணிக் காக்கும்
பீடறிய வல்லவன்எம் பெம்மான்" என்றும்
கோரரிய அருள்மாலை குழைத்தும் பாடிக்
கொழித்திருந்த மணிவார்த்தைக் கோவே தேவே.

"நில்லாத உலகமிதில் நில்லோம் செல்வோம்
நெஞ்சுருக்கும் செஞ்சடையான் நீண்ட பாதம்,
எல்லோரும் புகவம்மின் இணங்கிக் கூடி"
என்றுரைத்துப் படையெழுச்சி யியம்பித்தானும்
சொல்லார்ந்த சுவைமலிந்து தோன்றும் வெண்பா
சொல்லியும்" பண் டாயமறை" தொழுதும் சொ
குல்லாயும் அணிந்துபரி கூட்டுங் கோனைக் [ல்லிக்
கூடிமகிழ் மணிவார்த்தைக் கோவே தேவே. 45

திருமலிந்த தில்லைதனிற் சீவோ பாதி
சிதையவுமே படையாட்சி சீரிற் பாடி,
உருமலிசி வானுபவம் உவந்து பாடி
உள்ளமலி யானந்தம் ஓங்கு மாலை,
"தருமலிந்த அரன்தனருள் தந்திட் டாண்ட
தன்மைஎவர் பெறும்அச்சோ சாற்றும்" என்று
குருமலிந்த அம்பலமே கூடிச் சோதி
குடைந்தஉயர் மணிவார்த்தைக் கோவே தேவே.

சாற்றிடுநற் சைவமதம் சார்ந்த தொண்டர்
தனிப்பெரியர் ஓரறுபான் மூவர் தம்முள்
போற்றிடலுக் குரியர்உன் றன் புனிதப் பாட்டில்
புனிற்றுவின் கன்றெனத் தான்புலம்பிக் கண்ணை
மாற்றியெடுத் தரனுக்கிடும் மகிப னோடு
மருட்டாதை தாள்தடிந்த மகனும் தானோ?
கூற்றினையன் றுதைத்த இறைக் கன்பா கூறாய்
கூறரிய மணிவார்த்தைக் கோவே தேவே 47

எந்தையெழிற் பிறைச்சடையன் ஈசன் தன்னை
ஏத்துதிரு வாசகத்தில், "ஏழை யேன்றன்
னொந்தவுடல் தனிலிட்டும் நுகர்ந்து கொண்டாய்
நுண்ணியனே" என்றுமுன்நீ நுவன்ற தாலே
சந்தமுறு வீரசைவச் சமயத் தேநீ
சார்ந்திடுவாய் எனச்சிலரும் சாற்றக் கேட்டோம்
கொந்தணவும் பூம்பொழில்சூழ் வாத வூரின்
கோமகனே மணிவார்த்தைக் கோவே தேவே. 48

பாம்புபுலி உருவில்இரு பரம ஞானப்
பத்தர்களும்; பறவையொடு பன்றி யாகி
நாம்பிரமம் என்றவிரு நாதர் தாமும்;
ஞானநறும் பால்குடித்த நயத்தின் சேயோ
டோம்புரையின் அரையன்என ஓங்கி னேரும்
ஓரிறையை இரண்டிரண்டு பேரா யோதக்
கூன்பிறையன் தனைத்தனிநீ கூவிப் போற்றிக்
கூடிநின்றாய் மணிவார்த்தைக் கோவே தேவே. 49

சாக்கியர்என் பவர்புறத்துச் சமயஞ் சார்ந்தும்
சங்கரன்றாள் மறவாமல் தாங்கிக் கல்லைத்
தூக்கியெறிந் திறைவனடி தொடர்ந்து போற்றும்
தொண்டரையும் புகல்தொண்டத் தொகையில் [நின்னை
நீக்கிடவும் காரணம்தான், நினைந்த பேர்க்கு
நீயதற்குப் பிந்தியநாள் நிறைந்த தொன்றே
நோக்களிக்கும் வாசகரே கூறத் தோன்றின்
குற்றமதோ மணிவார்த்தைக் கோவே தேவே. 50

காலமெலாம் கடந்துநின்றெக் காலும் வாழ்முக்
கண்ணனுக்கொத் திடுபெருமைக் காரர் என்றே
ஞாலமெலாம் நிகழ்ந்ததமிழ் ஞான நாதன்
நன்முனியாம் அகத்தியரும்; நறவின் பாடல்

சீலமுடன் அருளியநற் றேவன் நீயும்
திகழ்ந்திருந்த காலமதைத் தெரிதற் கில்லோம் !
கோலமெலாம் குருவடிவிற் கூவிக் காட்டிக்
கூத்தன் அருள் மணிவார்த்தைக் கோவே தேவே.

உருவதனில் மணக்கோலம் ஒளிரும் தூய
உத்தமனும் சுந்தரர்க்கும், ஓங்கு காழி
ஒருமதலைக் குழவி,யுமை யுதவும் பாலை
உண்டவருட் கொண்டலுக்கும் ஓதும் காலைத்
தருவதனுக் குயர்வுறுபொன் தாங்கி நாளும்
தயவுசெயும் சிவன் உனக்குத் தாள்கள் காட்டிக்
குருவெனவந் துனதுபொருள் கூவிக் கொண்ட
குறிப்புரைத்தி மணிவார்த்தைக் கோவே தேவே.

ஊழிதனில் தனித்திருந்தும் ஓய்ந்த காலை
உதவுமெனப் படித்தலுக்கும் உறுதி யாக
வாழிசிவன் தனைப்புகழுன் வாச கத்தை
வளப்பிரதி கொளக்கருதி வரைந்திட் டானல்;
பாழுமடி யேனன்றுள பான்மை யின்றல்
படித்துமனத் திடையதனைப் பதித்துக் காத்தேன்
கோழியொடு பெடையும்எனக் கூடும் கூத்தன்
குறிப்பறிந்த மணிவார்த்தைக் கோவே தேவே.53

உத்தமராய் உலகமர்ந்தும் உருகிப் பாடி
உயர்ந்தமுறை தனிற்பயின்றும், ஓங்கும் ஈசன்
சுத்தமலர்ப் பதமடைந்த தூயர் தம்முள்
சொல்லரிய நல்லெழிலே தோய்ந்த நின்னை
மெத்தவுயர் அடியர்என மேவிப் பாரில்
மிகவுயர்ந்த நாடுபுகழ் மேன்மை கண்டோம்!
கொத்துமலர்க் கொன்றையணி கூத்தன் கூவிக்
கூடியருள் மணிவார்த்தைக் கோவே தேவே. 54

கலகமலைவ தமைவிளைசெய் சமயக் காட்டிற் [ம்
காலமெலாம் அலைந்துமிகக் களைத்திட் டோய்ந்து
உலகமதில் உலவிமிக ஒவ்வா தாகும்
உளுத்தபல சாத்திரங்கள் ஓதித் தேர்ந்தும்
நிலவுமன அமைதியெழில் நிகழ்தல் காணு
நீசனுக்குன் வாசகத்தேன் நினைந்த போதே
குலவுமன அமைதிமிகக் கூடக் கண்டேன்
கோமளமே மணிவார்த்தைக் கோவே தேவே. 55

மேனாட்டிற் சிறந்தஇங்கி லாந்தில் மேவி
மிகநாட்டிப் புகழ்உலகில், மேன்மைத் தாகும்
வானாட்டிற் சிறந்ததமிழ் வழங்கு நாட்டில்
வாழ்ந்திருந்துன் வாசகத்தேன் வாயும் ஊற
ஊனாட்டி யுளம்குழைந்தும் ஓதிக் கண்ணீர்
உகுத்தழுது போப்பையரென் றோங்கும் தூயோன்
கோனாட்டம் கூடினனால் கோதில் உன்சீர் [வே.
கூறவொண்ணேம் மணிவார்த்தைக் கோவே தே

வானிருந்த அமரர்களும் மாலும் தேனின்
மலரிருந்த அயனவனும் வாழ்த்திக் காணுக்
கோனிருந்த குருவுருவின் கோலந் தன்னைக்
குருந்தமர நிழலிருந்து கூடிக் காண்டல்
தேனிருந்த மொழிபயிலும் சீர்த்தி யார்ந்த
திருவிருந்த நினக்கல்லாற் சேர்தற் காமோ
கூனிருந்த பிறைச்சடையன் குழைத்துக் கூடிக்
கூவியருள் மணிவார்த்தைக் கோவே தேவே. 57

அருந்தவர்கள் மாமுனிவர் ஆற்றல் சான்ற
அரசர்இவர் பற்பலநாள் ஆர்ந்துங் காணு
மருந்தனைய சிவன்,இளைய மானைத் தாங்கும்
மணிக்கரத்தன் மகிழ்ந்துலகில் வாழி மேனாள்

பெருந்துறையில் உனக்கருளிப் பேண வையம்
பீடமரும் குருவாகிப் பேசி யுன்னைக்
குருந்தமரத் தடியிருந்தும் கொண்டார் ஆளாய்
கூவியுமே மணிவார்த்தைக் கோவே தேவே. 58

கங்கையணி சிரமதனிற் கந்தை சூடிக்
காலனையும் உதைத்தகழல் காதம் ஓடி
அங்கையுள அழலகற்றி யகண்ட கூடை
யதையெடுத்தும் அடிமடுத்தந் நாளி லார்ந்து
மங்கையிடும் உருவுடைய மகிபன் தூய
மாமணியன் வலிந்துனையும் வாழ்த்திக் கொண்டு
கொங்கலர்த்தாள் தலைிற்புகுத்தும் குறிப்பை ஞாலம்
கூறிடுமால் மணிவார்த்தைக் கோவே தேவே. 59

'நாவினுக்கோர் அரையன்'எ னும் நாமம் தானும்
நாட்டிய நவின் றருளி னூரென் றுலும்
பாவினுக்கோர் 'உலக'மெனும் பதமன் றீந்து
பாடவருள் உதவிதனைப் பாலித் தாலும்
மேவியுன தமுதமொழி மிகுந்த வேட்கை
மேலெழத்தம் திருக்கைகொடு விரைந்து தீட்டிக்
கூவியருள் பெருமைதனைக் குழகர் யார்க்கே
கொடுத்தனர் பின்? மணி வார்த்தைக் கோவே தேவே.

பிள்ளைதனைச் சமைத்தமுது பேணித் தந்தும்
பெற்றமருள் தந்தையின்றுள் பிளந்து தீர்த்தும்
கிள்ளைமொழி மனைவிமயற் கிழத்தி தன்னைக்
கேட்டவுடன் அளித்துமறக் கிளைகள் கொன் றும்
கள்ளுமலர் மகட்கூந்தல் கடிதி னீந்தும்
காலமெலாம் அடியர்சிலர் காதல் காட்டக்
கொள்ளைகொளத் தனதருளைக் கூவிக் கூத்தன்
கொடுக்கமகிழ் மணிவார்த்தைக் கோவே தேவே.

கல்லால மரந்தனையும் கருதி மாற்றிக்
காசினியில் குருந்தமரம் காணத் தோற்றி
நல்லார்கள் நால்வருக்கும் நயத்தில் ஈடு
நானிலத்தில் நீஎனத்தான் நவின்று தேடிப்
பல்லோரும் காணவுன்றன் பாசந் தீர்த்துப்
பரவரிய தொருவார்த்தைப் பண்பும் கூறிக்
கொல்லாநின் பிறவிவினை கூத்தன் நின்னைக்
கொண்டனன் ஆள் மணிவார்த்தைக் கோவே தேவே.

வாக்கிறைவன் எனுந்தமிழின் வளத்தின் வேந்தன்
"மாதவநீ நரிபரியாய் மாற்ற வல்ல
போக்கினன்என்" றினிதுரைத்துப் போந்த தாலே
புண்ணியனே நீயவர்முன் பூமி தன்னுள்
ஆக்கியுமுன் அமுதமொழி யார்ந்த தேனை
யனைத்துலகும் பருகநனி யரிதின் வாழ்ந்த
கோக்குகந்த குருவெனவும் கோடற் காமோ
கூறிடுவாய் மணிவார்த்தைக் கோவே தேவே. 63

மாதுமைதன் முலைப்பாலை மகிழ்ந்து ஞான
வளமுடனும் குழைத்தருள வாங்கி மேனாள்
காதுடைய தோடதனைக் கசிந்து பாடிக்
கைவிரலாற் சிவன்காட்டும் காழிச் செல்வன்
வாதுடைய சமணழித்து வாழச் சைவம்
வலிமைபெற வளர்த்ததற்கு முன்னோ பின்னோ
கோதறநீ உலகமதிற் கூடி வாழ்ந் தாய்!
கூறிடுவாய் மணிவார்த்தைக் கோவே தேவே. 64

தேவியுமை பிரிதலறும் தேகந் தன்னைத்
தெருவிலுழல் உருமலியும் தேக மாக்கி
ஆவிமலி குழவிருசிக் கலந்த நாவில்
ஆய்ச்சிபிட்டுச் சுவையதனுக் காசை யேற்றி

மேவும்எழில் மதுரைதனில் மேனாள் ஈசன்
மிகவெளிதில் விரைந்தடைந்து வியப்ப ஞாலம்
கூவியுனக் கடிமைதனைக் கொடுத்த மேன்மை [வே?
கொண்டனர்யார் மணிவார்த்தைக் கோவே தே

படைத்தநிதிப் பயன் இறைவன் பண்பைக் கூடும்
பற்றுடையார்க் குதவிடுதல் பாங்கென் றோர்ந்து
இடைத்தநிதிப் பெருக்கைமுனம் கிளரும் கோயில்
கிளப்பியும்பின் அடியர்பசிக் கேடும் தீர
அடைத்தசுவை யமுதளித்தும் ஆர்வந் தாங்கி
அடைந்துபெருந் துறையிலரு ளாளன் தன்னைக்
குடைத்தருவின் குருந்தனிழற் கூடிக் காதல் [வே.
கொண்டுயர்ந்தாய் மணிவார்த்தைக் கோவே தே

வழியடியர் தமக்கெதுநல் வகையிற் றுகும்
வளமுடைய தெனவறிந்து வழங்கு நாதன்
செழியனிடம் அமைச்சரென்று சேர்த்திட் டுன்னைச்
சிறுநெறிகள் மலியுலகில் சேர்த்தி டாமல்
பிழியமுதக் கனிரசமும் பிறங்கு தூய
பேசரிய வாசகம்நீ பெரிதும் பாடிக்
கொழிதமிழைப் பொழியஅருள் கூட்டும் மேன்மைக்
குணமறிவோம் மணிவார்த்தைக் கோவே தேவே.

ஓங்குசிவப் பிரகாச ஒளியின் நாதன்
ஓதியநான் மணிமாலை உயர்ந்த நூலில்
தேங்குபுகழ்த் தமிழ்மலியுன் தெய்வப் பாடற்
சிறப்பதனை யுரைப்பதனைத் திளைத்த பேர்க்கே
மாங்கனியும் தீம்பாலும் மதுரத் தேனும்
வளர்கரும்பும் உளம்விரும்ப மாட்டா தாகும்!
கோங்கலரின் எழிற்கொன்றை கூடும் வேணிக்
கூத்தனருள் மணிவார்த்தைக் கோவே தேவே. 68

முடியுடைய வழுதியிடம் மூண்டன் றேகி [ல்
முன்னவன்றன் நின்பொருட்டே மூங்கிற் கோலா
அடியடைந்த பெருமையையும் அதன்பின் நீயும்
அடியடைந்த அருமையையும் ஆர்வம் ஓங்கும்
வடிவுடைய அடியவர்கள் வழுத்தி நாளும்
வணங்குகின்ற வடலூரில் வாழ்ந்த வள்ளல்
குடியமுதச் செழுந்தமிழிற் கூறும் வார்த்தை
கூறிநின்றேன் மணிவார்த்தைக் கோவே தேவே.

தனித்திருக்கும் சமயமதிற் சார்பு மாகிச்
சகித்திருக்க உலகமதிற் றமரு மாகி
இனித்திருந்தென் உளம்நாமற் றென்பில் எல்லாம்
எழிற்சிவனின் கழற்சுகத்தை யெளிதிற் கூட்டி
மலித்தர்நனி படிப்பின்சிவ மயமு மாக்கும்
மாமலரின் வாசகத்தை மகிழ்ந்திட் டீந்து
குனித்ததிருப் புருவஅரன் கூத்தன் பாதம்
கூடினை நீ மணிவார்த்தைக் கோவே தேவே. 70

பாமரரும் படித்தவரும் பணத்தி னோரும்
பரமதரித் திரரவரும் பாலர் மூத்தோர்
காமமிகும் காளையரும் கனத்த கொங்கைக்
கன்னியரும் பகுத்தறிவிற் கனத்த பேரும்
சேமமுறத் தெரிந்துனுரை திளைத்துப் பாடின்
சித்தமெலாம் சிவம்நிறைந்த சீர்த்தி சேர்வர்
கோமகனே யிஃதறிந்து கொண்டார் வாழ்வர்
கோதறுவர் மணிவார்த்தைக் கோவே தேவே. 71

சாதிகுலம் பிறப்பென்னும் சம்ப்ர தாயம் [ம்
தடஞ்சுழி என்றுளஞ் சலித்துச் சாற்றிப் பின்னு
பேதமுறும் பலசமயம் பிழைகள் பேணிப்
பிணக்குறுமென் றுரைத்திடுநின் பீடு காணத்

தீதமரும் சழக்கர்கொளும் சிறுமைக் கெல்லாம்
தீக்கொளுத்தும் கருத்துடைய திருத்தக் காரர்
கோதறும்எங் குருவெனவும் கூறிப் போற்றிக்
கூடிடுவார் மணிவார்த்தைக் கோவே தேவே. 72

எடுத்தியம்பு சைவமதத் திறைவர் நால்வர்
இவர்களுளே உன்றனைப்போல் எளிதில் யாரும்
படித்தவுடன் மனத்தைநொடிப் போதிற் பாகாய்
பாங்கின்மெழு காயுருக்கிப் பாலும் தேனும்
மடுத்தசுகம் கொடுப்பதிலை எனுமிம் மாற்றம்
மாநிலத்தோர் தாம்மதித்து மகிழ்ந்து சொல்வர்!
கொடுத்துனருள் எடுத்துயர்த்தும் குருவென் றுன்னைக்
கூடினன்காண் மணிவார்த்தைக் கோவே தேவே.

எழில்நீற்றின் இறைவனருள் எளிதிற் கூடி
எண்ணமுடல் செவிமூக்கென் றெல்லாம் ஈசன்
கழலதனில் இருத்தியுநீ கசிந்து பாடக்
காசினியோர் தத்தமக்காம் கருத்தைக் காட்டிப்
பழமைபெறும் வேதாந்தம் பகரும் என்றும்
பண்புறுசித் தாந்தமதைப் பரவும் என்றும்
கொழிதமிழின் நினதுரையைக் கூறிக்கூறிக்
கொண்டிருப்பார் மணிவார்த்தைக் கோவே தேவே.

வானளந்து மிசையுயர்ந்த மாடந் தாங்கும்
மாளிகையில் மலர்கள்நிறை மஞ்சம் சார்ந்து
தேனளந்தும் இனிமைமிகச் சேர்ந்த வார்த்தைச்
சேயிழையர் சிறுமைதனில் தேங்கி வாழ்ந்தும்
ஊனளந்த உடல்வளர்த்தும் ஒய்ந்து மாண்ட
உலுத்தனென்னை வலித்துவந்தும் உய்விப் பாய்காண்
கோனளந்த வாசகரே கோதில் தூய
கோமளமே மணிவார்த்தைக் கோவே தேவே. 75

மெய்வழியே உறுதியென மேவார் தம்மை
மேல்வழியில் உளரெனவும் மேவி நானும்
உய்வழியே யிறுதிவரை யோம்பி டாமல்
ஒருவழியும் அறிவதின்றி ஓய்ந்து நின்றேன்
மைவழியும் விழியுமையின் மைய லாளை
மால்வழியும் மனத்தொடுநன் மாலை பாடிக்
கொய்மலர்கொண் டிறைஞ்சுமுனைக் கூடிச் சார்ந்தேன்
கூவிடுவாய் மணிவார்த்தைக் கோவே தேவே. 76

வாய்புதைத்துக் கரம்பொருத்தி வாழ்த்தித் தீங்கு
வல்லவர்க்கே வணங்கும்இழி வாழ்க்கைச் சேற்றில்
நாய்மதித்தும் விரும்புதல்இல் நாசக் கோலம்
நான்மதித்துச் சுழன்றுழன்ற நாளும் சாலும்
வேய்மதிக்கும் தோளுமையின் வேந்தன் பாதம்
வெவ்வினையேன் அடைந்திடவும் வேண்டி நீயும்
கூய்மதித்துன் திருவருளைக் கூட்டிக் காவாய்
கோதகற்றாய் மணிவார்த்தைக் கோவே தேவே.

மாடுமனை யுறவினொடும் மாத ரீட்டம்
மகிழ்புதல்வர் இவர்கள்துணை மாண்பிற் றாகும்
நாடுதனை மந்திரியாய் நாதன் றானாய்
நனிபுரியின் இனிதாட்சி நாளும் சாலும்
வீடுமினி விழைந்துபெறல் வேண்டற் காமோ
வீணெனவும் உரைத்தழிந்து வீழ்ந்த வென்னைக்
கூடுபுகழ் திருநெறியிற் கூட்டிக் காவாய்
கோமகனே மணிவார்த்தைக் கோவே தேவே. 78

தோன்றுதொட்டுப் படைத்தெனையும் சோர்ந்து போனான்
துய்யசெங்க மலத்தயனும், தோன்றத் தோன்றிக்
கொன்றுவிட்டுக் களைத்தனன்வெங் கூற்றன் கூடிக்
கூடுதொறும் புகுந்திளைத்துக் கோடிக் காலம்

அன்றுதொட்டின் றலேந்துழலும் அடியன் என்னை
ஆசைவிட்ட அடியார்குழு அதனிற் சேர்ப்பாய்
குன்றை யொத்த தோளுடையான் கூத்தன் ஆண்ட
கோமளமே மணிவார்த்தைக் கோவே தேவே. 79

பாசமெனுங் குழிவிழுந்து பாரில் மாண்டு
பண்பிழந்த சழக்கன்என் றன் பாவம் தீர்த்து
நேசமெனும் கயிறெடுத்து நினைந்திட் டென்றன்
நெஞ்சமதில் உனதிரண்டு நீண்ட கஞ்ச
வாசமலர்த் திருத்தாளை மகிழ்ந்து சேர்ப்பாய்
வாசவனும் மலரவனும் வாழ்த்திப் பாடக்
கூசுமலர்க் கழலிறைவன் குழகன் தேடிக்
கூவியருள் மணிவார்த்தைக் கோவே தேவே. 80

மங்கலநாண் தரித்திடுமென் மனைவி யோடு
மண்ணுலகில் இனி துயர்ந்து வாழ்ந்தி டாமல்
" எங்குளன்எம் மிறைவன்அருள் ஈசன் " என்ன
எவ்விடமும் உலகதினில் ஏங்கித் தேடிக்
கங்குல்பகல் திரியும்மனைக் கைகள் காட்டிக்
காசினியோர் நகைத்திழித்தெக் காலும் கூறக்
கொங்கலர்சேர் நின்றிருத்தாள் கூடிச் சார்ந்து [வே.
கொண்டுறைவேன் மணிவார்த்தைக் கோவே தே

ஏதுசெயல் புரிந்திடினும் ஏதைப் பேசி
யிருந்திடினும் இழியுலகம் ஏசி யாண்டும்
தீதுசொலல் இயல்பெனவும் தெளிந்த பின்னும்
சிறுநெறியிற் செறிந்திருந்து தீங்கும் சேர்ந்து
வாதுசெயல் எனுந்தொழிலில் வாழ்ந்து மாண்டேன்
வளம்பெறுமுன் திருவார்த்தை மகிழ்ந்து பாடிக்
கோதகலும் அடியார்குழுக் கூடிச் சாரக்
கூவிடுவாய் மணிவார்த்தைக் கோவே தேவே. 82

பிழைத்திடினும் சிறியவர்கள் பெரிய பேர்கள்
பிரியமுடன் பொறுத்தவரைப் பேணித் தாமும்
அழைத்துயர்ந்த நெறியருளி யாக்கம் ஈயும்
அறத்தினைநன் கறிந்திடுநீ யாண்டிட் டென்னை
நுழைத்துனருள் அடியர்குழு நுகர யானும்
நுவலருமுன் னருட்டேனை நொடியிற் செய்வாய்
குழைத்தமுதத் தமிழ்மலரைக் குழகன் றாட்கே
கூவியணி மணிவார்த்தைக் கோவே தேவே. 83

வந்துபிறந் திறந்துழன்று வாழ்ந்து மாறி
வையமதே சலித்திடவும் மலிந்த யானும்
இந்தவிதம் எறும்புமுதல் யானை யீறும்
எண்ணருபல் பிறவிகளை எடுத்திட் டோய்ந்தேன்
சந்தமுறு நறுந்தமிழிற் சார்ந்த வேதத்
தன்மையுறு வாசகத்தேன் சமைத்த நாத
கொந்துகுழற் குவிமுலையள் கூறன் பாதம்
கூட்டிடுவாய் மணிவார்த்தைக் கோவே தேவே.

அஞ்சுகின்ற நெஞ்சுடையேன் ஆசை நீங்கேன்
அஞ்சுபுலன் அவைக்கடிமை யாளாய் நின்றேன்
கெஞ்சுகின்ற அடிமைதனிற் கிழமை சேர்த்தேன்
கிளறுமுன துயர்புகழைக் கேட்க கில்லேன்
துஞ்சுகின்றார் செத்தவரென் றுரைத்த தூய
சொல்மறந்தும் துயின்றுநிதம் சோர்ந்து போனே
கொஞ்சுகின்ற கிளிமகிழும் குணத்தின் பாடல் [ன்
கூறியவா மணிவார்த்தைக் கோவே தேவே. 85

அற்றமிலா அருந்தவத்தின் அடியார் கூடி
யன்புடனின் அரும்புகழை யாடிப் பாட
வற்றன்மரம் எனவடியன் வாடி நாளும்
வஞ்சநிறை நெஞ்சினனாய் மாய்தல் நன்றோ

பற்றழிய வுதவும்அருட் பரமன் பாதம்
பற்றுதற்குன் றிருவார்த்தை பாடிப் பாடிக்
குற்றமறும் அடிமைபெறக் கூடிச் சார்ந்தேன்
கூவியருள் மணிவார்த்தைக் கோவே தேவே. 86

நாட்டினிற்பல் இடங்கள்தனில் நலிந்த மாந்தர்
நவைமிகவே பணிசெய்பல நாட்டுத் தேவர்
வாட்டியரும் உயிர்கள்பலி வாங்கித் திங்கு
வளர்த்திடுபல் சேட்டைமிகும் வாதுத் தேவர்
கோட்டைமலி யரசரெனும் குறும்புத் தேவர்
கூறுமிந்தக் குறுந்தேவர் கூட்டம் நாடேன்
கூட்டியெனைக் குணத்தடியர் குழுவிற் சேர்ப்பாய்
கோதறுப்பாய் மணிவார்த்தைக் கோவே தேவே.

“ முத்திபெற முழுதுமன மூண்ட காதல்
முற்றிடப்பின் சமயமுண்டு, மோகம் தாங்கிப்
பத்தினியும் குழவிகளும் பரந்து சூழப்
பதவிதனிற் சுகமடையும் பான்மை கொள்வாய்
புத்தியிது” எனவுரைசெய் போதம் வேண்டேன் !
புக்குபொழில் குருகிறகின் புனலைப் போக்கிக்
கொத்தியிரை பயிலும்பெருந் துறையன் றன்னைக்
கூடிநிற்பேன் மணிவார்த்தைக் கோவே தேவே.

பொல்லாத கயவரிடைப் புகுந்து பொய்ம்மை
போற்றுநின் றரற்றியழி புலையன் யானும்
அல்லாத சிறுநெறியில் அடைந்தெந் நாளும்
அகலாத இடர்களவை யாய்ந்து சேர்த்தேன்
கல்லால நிழலிலமர் காட்சிக் கோனைக்
கவினார்ந்த குருந்தினடி கண்டோய் காவாய்
கொல்லாத அறநெறியிற் கூடும் அன்பர்
கூடிமகிழ் மணிவார்த்தைக் கோவே தேவே. 89

பூத்திருக்கும் பொய்கைதனிற் புனல்என் றெண்ணிப்
பொய்த்திடுபேய்த் தேர்தனையே புசிக்கத் தானும்
காத்திருக்கும் குணப்பேதைக் கடையன் என்னைக்
கைத்திருக்கும் ருசிவாழ்விற் காளா காமல்
பார்த்திருக்க உலகினில்அப் பாநீ யல்லால்
பண்பிருக்கும் நண்பரில்லை பந்த மில்லை
கூத்தருக்குன் வாசகத்தேன் குடிக்கப் பாடிக்
கொடுத்தபெரு மணிவார்த்தைக் கோவே தேவே.

அஞ்சுபுல னவையடக்கி யார்வந் தாங்கும்
அருமனத்தைச் சிவமனமு மாக்கிக் காதல்
நெஞ்சுருகி நெக்குநெக்காய் நெகிழ்த்திட் டீசன்
நீளடிக்கே யாளதுவாய் நீறும் பூசிச்
செஞ்சுடரின் சிவனடிகள் தேடித் தேடித்
தெருவுதொறும் மிகவலறித் திரிந்து தேரேன்
கொஞ்சுமொழி யுமைஇறையைக் கூடும் ஆற்றிற்
கூட்டிடுவாய் மணிவார்த்தைக் கோவே தேவே.

தேவுமால் படைத்துமனம் தேடித் தேடிச்
சிவன் கழலைத் தொழுதழுதும் சிரித்தும் பாடி
மேவுமால் இவனதுளம் மேவும் மத்தம்;
மேன்மையறும் பித்தன்என்றே மிகவும் ஏசிக்
கூவிடவே எனையுலகம் குழைத்துக் கூடிக்
கோதறயான் நளியடைவன் குருந்தின் நீழற்
கோவுமார் பெருந்துறையிற் கூத்தன் பாதம்
கூட்டிடுவாய் மணிவார்த்தைக் கோவே தேவே.92

தத்தமுளே தட்டுளுப்பால் தாக்கித் தீய
சச்சரவு விளைத்திடுபல் சமயச் சார்பில்
நித்தமுளேன் ஆதலினுல் நெகிழ்த்திட் டுள்ளம்
நெக்குருகப் புக்கரனுர் நேரும் கோயில்

சித்தமுளே உளதெனவும் தேர்தல் இல்லேன்
தேனிருக்க வேம்புதின்னும் திறத்தி னேன்யான்
கொத்துமலர்க் கொன்றைமுடிக் கூத்தன் றருளே
கூட்டிடுவாய் மணிவார்த்தைக் கோவே தேவே.

வேதமவை படித்திடலும் வேண்டேன், வேத
விழுப்பொருளின் முழுப்பழமென்றேங்கும்மேன்மைப்
போதஉப நிடதமதும் பொருள்என் றெண்ணேன்
போற்றுகின்ற கீதையெனும் புகலும் போகேன்
நாதமுதற் கலைகளவை நாடும் ஈசன்
நனியெழுத யினிதுமேநீ நவின்ற பாட்டைக்
கோதறயான் படித்திடிலே கூத்தன் பாதம்
கூடிடலாம் மணிவார்த்தைக் கோவே தேவே. 94

தினைத்தனையும் ருசிக்கும்சிறு தேனின் கூட்டைச்
சென்றடையின் வண்டுகுழாம் சீறித் தாக்கிப்
பனைத்துணையின் இடர்கள்தமைப் பயக்கும் நீதி
பாரதனிற் கண்டனனுல் பரிவு கூடி
நினைத்தவுடன் அனைத்தெலும்பும் நெகிழ்வித் தோங்கும்
நிறைபிரசச் சிவமதனை நேடிச் சேரக்
குனிப்புடைநின் வாசகத்தேன் கூட்டைச் சார்ந்தேன்
கூவியருள் மணிவார்த்தைக் கோவே தேவே. 95

காட்டிலுறும் நரிகள்தமைக் கணத்தில் மாற்றிக்
கனத்தபரி எனத்திருத்திக் காட்டி மேனுள்
ஓட்டியெழில் மதுரைதனில் ஓங்கும் நாதன்
உன்பொருட்டும் அற்புதந்தான் உவந்திட் டாங்குன்
பாட்டிரையை மேய்ந்துவளர் பரியென் றாக்கிப்
பாழ்நரியாம் எனதுகொடும் பான்மை மாற்றாய்
கூட்டியுனையுலகறியக் கூத்தன் பாதம்
கொடுத்தபெரு மணிவார்த்தைக் கோவேதேவே.

ஆறுயர்ந்த அங்கமவை யமைந்த வேதம்
அதிற்பொலியும் ஐந்தெழுத்தை யறிந்துகூறேன்
நீறுயர்ந்த மேனியுடன் நெகிழ்ந்திட் டுள்ளம்
நெக்குநெக்காய்க் கசிந்திடவும் நீளத் தொண்டே
ஏறுயர்ந்த எம்பெருமாற் கியற்ற கில்லேன்
இனியுயர்ந்த பதமெனக்கி யாண்டு கூடும்
கூறுதிரு வாசகத்தேன் கூறின் அல்லால்
கூறிடுவாய் மணிவார்த்தைக் கோவே தேவே. 97

சாத்திரங்கள் பலதெரிந்தும் சமய நூல்கள்
சகலமுமே நனியறிந்தும் தாழ்வில் லாத
கோத்திரங்கள் தமிற்பிறந்தும் குடியின் மேன்மைக்
குறியிருந்தும் குழகனடிக் குறியில் லாதார்
நேத்திரங்கள் இருந்தும்பொருள் நேரக் காணு
நீர்மையினர் எனவுணர்ந்துன் நீண்ட காதல்
கோத்தருளும் வாசகத்தேன் குடிக்கும் வேட்கை
கொண்டடைந்தேன் மணிவார்த்தைக் கோவே தேவே.

மந்திரியாம் பதவிதனை மதித்தி டாமல்
மன்னுமொரு முப்பதன் முன்மாய்த்தப் பேற்றை
வெந்திரியும் மாயைதனில் விளையும் வாழ்க்கை
வீழ்த்தியரன் வாழ்த்தியநின் வீரம் போற்றி
இந்திரிய வயமயங்கி யிறக்கும் நாயேன்
என்பதவித் தனைதனையும் எசித் தள்ளிக்
குந்திமரங் கூடிடுமென் குருவைத் தேடிக்
கூவிடுவேன் மணிவார்த்தைக் கோவே தேவே.

நின் றிடினும் இருந்திடினும் நீளத் தூங்க
நேர்ந்திடினும் விழித்திடினும் நீண்ட தூரம்
சென் றிடினும் செகத்தினிடைத் தேடி மாதைச்
சேர்ந்திடினும் நின்றமிழே திகழ்ந்தென் னுவில்
ஒன் றிடவுன் புனிதஅருள் ஓங்கு மாகில்
உயர்பரிதி எங்கெழில்என் உணர மாட்டேன்
குன் றிலிடும் ஒளியெனவும் கூடுஞ் சோதிக்
குணமுடையமணிவார்த்தைக் கோவேதேவே. 100

முற்றிற்று

"தென்னு டைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"

குறிப்பு

1. மரு மலிந்த - வாசனை நிறைந்த. குரு மலிந்து - பெருமை, ஒளி மலிந்து. அஞ்செழுத்தை முதற்கோத்து மாலை கொடுத்தனை என்றது சிவபுராணத்தை 'நமச் சிவாய வாழ்க' என்ற சொல்லுடன் தொடங்கியதைக் குறிப்பதாகும்.

2. பிரமை - ப்ரேமை; அன்பு. கொல்லுநரி...... - நரியைப் பரியாக்கிய திருவிளையாடலைக் குறிப்பிடும்.

4. நான் எனதென் உரைமாய்த்து - நான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் கொன்று. தேனித்தாடி - 'சிரிப்பார், களிப்பார் தேனிப்பார்' என்ற திருவாசகப் பாடலை நோக்குக. சிவபிரான் அந்தண வடிவினனாகி வந்து மணிவாசகனாரின் திருவாசகத்தைத் தனது திருக்கரத்தாற்றானே தீட்டினமை குறிக்கப்பட்டுள்ளது.

7. கோதும் தீர - குற்றம் தீர.

9. பருசிரங்கள் - பெரிய தலைகள். 'ஒருகனியே, புனல் சுரக்கும் ஊற்றே, குருசிகையின் மணியே' என்று கூறிப் பாடும் எனக் கொள்க.

10. கடலமுதம் நிகர்த்த தேனையும் நெய்யைப் பாலையும் பாசமறப் பருகுதல் என்க. இவ்விரண்டு உவமைகளும் திருவாசகத்தையே குறிக்கும்பாற்றன.

(இ - ள்) எம்பெருமான் இணையடிகளைப் பெறுதற்கு நேசமுறுந் திருவாசகத்தைப் படித்தலே முறையான வழி எனப் பாரிலுள்ளோர் கொள்வர்.

12. 'ஓங்கும் வார்த்தை ஒன்றதனை' என்றது ஓங்காரத்தை. "உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை, ஐயனெனக் கருளியவாறு", "மன்ன என்னையோர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்" என்ற திருவாசகப் பாடல்களைக் காண்க.

15. கங்காளர் - எலும்புமாலை யணிபவர்; சிவபிரான். அரும்புணை - அரிய பற்றுக்கோடு, பிறவிக் கடலினின்றும் தப்புவிக்கும் தெப்பம். அருட்பண்டாரக் கொடை மலியும் - அருளாகிய செல்வத்தை வரையிலாது கொடுக்கும்: தாராய் என்பதன் செயப்படுபொருள் அரும்புணை எனக் கொள்க.

முதற் பாட்டிலிருந்து 15-வது பாட்டுவரை ஒவ்வொரு முதற்பதமும் திருவாசகத்தின் அதிகாரங்களின் முதற் பதமாய் முறையே இருத்தல் காண்க.

17. குடியமுதம் - குடிக்கப்படும் அமுதம். தமிழ்ப் பிரசம் - தமிழ்த்தேன்.

18. தன்னைக் கண்ணால் கண்டவுடன் மங்கையர்களுக்குத் தன்மீது மையல் உண்டாகித் தமது வளையல்கள் கறன்று வீழவும் உடைகள் அவிழவும்செய்கின்ற மேனியையுடைய சங்கரன் தரித்த மலரைச் சூடினார் மணிவாசகனார் என்றும், பின்னும் மணிவாசகனார் அம்மங்கையரேபோலத் தாமும் மையல்கொண்டு உளம் நைந்து, தவித்து, பரிசுத்தமான காதலுடன் சிவனின் தோட்களைத் தழுவவும், சிவனின் அதரம் சுவைக்கத் துடித்தும் ("செவ்வாய்க் குருகுவேன்") சோர்ந்து பின் அச்சிவனின் பாதம் சேர்ந்தார் என்பது இதன் பொருள். "சூடுவேன் பூங்கொன்றை" என்ற அடிகளார் பாடலைத் திருவாசகத்தில் திருவம்மானையிற் பார்க்க.

19. ஆளிநாத - ஆளிபோன்ற நாதனே. கொலைமலி முப்புரம் - கொலைகளைச் செய்த மூன்று புரங்கள்.

20. இருக்கார்வத்துடன் பணியும் - இருக்கு (ரிக்) எனும் வேதம் ஆசையுடன் பணிகின்ற.

21. "அன்றே என்றன் ஆவியும் உடலும்" என்ற பாட்டை நோக்குக.

22. "தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னை" என்ற பாட்டை நோக்குக.

24-வது செய்யுளிலிருந்து 46-வது செய்யுள் வரை திருவாசகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் அடங்கிய உட்கருத்து கூறப்பட்டுள்ளது.

47. மகிபனோடு - கண்ணப்ப நாயனார். மகனும் தானோ - சண்டேசுர நாயனார்.

49. பாம்புபுலி உருவில்இரு பரமஞான்ப் பத்தர்களும் - பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்கள். பறவையொடு பன்றியாகி நாம்பிரமம் என்றவிரு நாதர் - பிரமாவும் விஷ்ணுவும். ஞானநறும் பால்குடித்த நயத்தின் சேயோடு ஓம்புரையின் அரையன்என ஓங்கினோரும் - ஞானசம்பந்தரும், நாவுக்கரையரும். ஓரிறையை - சிவபெருமானை. பதஞ்சலி வியாக்கிரபாதர் என்ற முனிவர்களும், பிரமன் விஷ்ணு என்ற தேவர்களும், ஞானசம்பந்தர், நாவுக்கரையர் என்ற அடியார்களும் முறையே இரண்டு இரண்டு பேர்களாய்க் கூடிச் சிவபிரானை வணங்க, மாணிக்கவாசகர்மட்டும் தனியாகச் சென்று சிவபிரானை வணங்கிச் சென்றார் என்பது இதன் கருத்து.

50. புறச்சமயத்தாராகிய சாக்கிய நாயனாரையும் கூறிய திருத்தொண்டத்தொகையில் மாணிக்கவாசகராகிய சிறந்த அடியாரைக் கூறாதுவிட்டதற்குக் காரணம் மாணிக்கவாசகனார் தொண்டத்தொகைக்குப் பிற்காலத்தவர் என்பது ஒன்றேதான் என்று கொள்ளுதல் குற்றமுடையதாகாது என்பது இதன் கருத்து.

51. சிவபிரானுக்கு இணையானவர்கள் குறுமுனியும் மணிவாசகனாரும். ஆதலால்தான், எப்படி சிவபெருமான் காலங் கடந்து நிற்கிறாரோ, அப்படியே அகத்தியரும், மணிவாசகனாரும் கால நிர்ணயத்திற்குட்படாதவர்களாக விளங்குகிறார்கள் என்பது இதன் கருத்து.

53. காலஞ்சென்ற புரபஸர் சுந்தரம் பிள்ளை அவர்கள் மனோன்மணியத்தில் கூறிய கற்பனை ஈண்டு ஆளப்பட்டுள்ளது. ஊழிக் காலத்திற்குப் பின் ஒய்விலிருக்கும்

சிவபெருமான், பொழுது போக்கிற்காகத் தமக்கு உதவும் என்று எண்ணி மணிவாசகனார் அருளிய திருவாசகத்தைத் தம் கரத்தாலேயே எழுதி ஒரு பிரதியை வைத்துக்கொண்டுள்ளார் போலும்! ஆனால் எனது ஜீவன் அவ்வமயம் இருப்பது இயலாததால் இப்போதே அத்தெய்வத் திருநூலை மனப்பாடம் செய்து கொண்டேன் என்பது இதன் கருத்து.

56. போப்பையரென் றோங்கும் தூயோன் - ரெவரண்டு டாக்டர் போப் அவர்கள். ஆங்கில நாட்டிலும் அந்நிய சமயத்தும் பிறந்த போப்பையர் அவர்களையும் உருக்கித் தன் வயப்படுத்திய திருவாசகத்தின் பெருமையை என்னென்பது இதன் கருத்து. போப்பையர் இதன் காரணமாக 'அப்பாலும் அடிச்சார்ந்தாரிற்' சேர்ந்தவர் போலும்!

61. சிறுத்தொண்டர், சண்டேசுரர், இயற்பகையார், மானக்கஞ்சாறர் முதலிய அடியார்கள் பற்பல தியாகங்களைச் செய்து சிவபிரானைத் தேடிநிற்க, மாணிக்கவாசகரிடம் சிவபிரான் தாமே வலியச் சென்று "வாரி வாரிக் கொள்ளைகொள்" என்று தன் அருளை வழங்குகின்றார் என்பது இதன் கருத்து.

62. கொல்லாநின் பிறவிவினை - நின் பிறவி வினையைக் கொன்று. கல்லால மரத்திற்குப் பதில் குருந்த மரத்தை உண்டாக்கியும், சனகர் முதலிய நால்வருக்குப் பதிலாக மணிவாசகரை முன்நிறுத்தியும் சிவபிரான் உபதேசம் செய்தமை குறிக்கப்பட்டது.

63. 'நரியைக் குதிரை செய்வானும்' என்று அப்பர் சுவாமிகள் பாடியிருத்தலால் அவர்காலத்திற்கு முற்பட்டவர் மணிவாசகனார் என்று கூறுதல் பொருந்துமா என்பது கருத்து.

65. ஆவிமலி குழவிருசிக் கலைந்த நாவில் - உயிர் மலிந்த குழந்தையாகிய சீராளன் என்ற பிள்ளையின் உடற்கறி ருசிக்காக அலைந்த சிவபிரானது நாவில். ஆய்ச்சி பிட்டுச் சுவை - மதுரைப் பிட்டு வாணிச்சியாகிய வந்தியின் பிட்டுச்சுவை.

66. குடைத்தருவின் - குடைபோன்று பரந்து கற்பகத் தருவைப்போன்ற குணமுடைய.

68. சிவப்பிரகாசர், நான்மணிமாலையில் மணிவாசகரைப் புகழும் பாடல்களைப் படித்தவர்க்கு மாங்கனி, தேன், பால் முதலியவையும் ருசியற்றனவாகிவிடும். அப் பாடல்களின் இனிமையைப் புகழ்ந்தவாறு.

69. இராமலிங்க வள்ளலார் திருவாசகத்தை வியந்து பாடினமை குறிப்பிடப்பட்டது.

70. தனித்திருக்கும் சமயமதிற் சார்புமாகி - ஒருவன் தனியாக அமர்ந்திருக்கும் வேளையில் துணையுமாகி - மற்ற மதங்களினின்றும் உயர்ந்து வேறாகித் தனியே நிற்கும் சைவ சமயத்தின் துணையுமாகி என்றும் கொள்ளலாம்.

72. சீர்திருத்தக்காரர்களும் விரும்பும் வண்ணம் அடிகளார் அக்காலத்திலேயே 'சாதிகுலம் பிறப்பு' முதலிய வேறுபாடுகளைக் கண்டித்தமை வியந்து கூறப் பட்டது.

74. மணிவாசகனார் தம் கரணங்களெல்லாவற்றையும் சிவன்பால்வைத்து, "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்" தன்மையில் திருவாசகத்தைப் பாடிச் சென்றார். ஆனால் தற்காலத்தவர்கள் "இவர் கொள்கை வேதாந்தம்" எனவும், "இவர் கூறுதல் சித்தாந்தம்" எனவும் முறையே தத்தமது கொள்கைக்கு ஆதாரமாக இவர்தம் கூற்றுக்களை ஏற்றுக்கொண்டு வாதாடுவர் என்பதைக் குறிக்கும் இப்பாடல்.

76. மால்வழியும் மனம் - தேவுமால் கொண்டமனம் - சிவப்பிரேமை எனினும் பொருந்தும்.

77. வேய்மதிக்கும் - மூங்கிலையொத்த. கூய்மதித்து - கூவி மதித்து.

85. "துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும், நஞ்சுண்பார் கள்ளுண் பவர்" என்ற குறளின் கருத்து இச்செய்யுளில் ஆளப்பட்டுள்ளது காண்க.

87. நவை மிகவே - குற்றம் பொருந்தவே.

88. பொழில் புக்கு குருகு தன் இறகின் புனலைப் போக்கிக் கொத்தி இரைபயிலும் பெருந்துறை என்று கொள்க. குருகு - கொக்கு - நாரை.

90. பேய்த்தேர் - கானல்நீர். கைத்திருக்கும் ருசி வாழ்வு - கசந்திருக்கும் உருசியையுடைய வாழ்க்கை.

93. தத்தமுளே தட்டுளுப்பால் தாக்கித்திய சச்சரவு விளைத்திடுபல் சமயம் - தத்தமக்குள்ளே ஒன்றோடொன்று ஒவ்வாமல் சண்டை செய்து பிணக்குகளை உண்டாக்கித் திரியும் மதங்கள். 'தேனிருக்க வேம்பு தின்னும் திறத்தினேன்'—அப்பர் சுவாமிகளின் திருவாக்கு.

94. வேதங்களையும், உபநிடதங்களையும், கீதையையும் படியாவிட்டாலும், சிவபெருமான் தாமே விரும்பி எழுத எழுத மாணிக்கவாசகரால் பாடப்பட்ட பெருமையையுடைய திருவாசகம் ஒன்றைமட்டும் படித்தால் இறைவன் திருவடிகளை யடையமுடியும் என்பது இதன் கருத்து.

96. உன் பாட்டிடுரையை மேய்ந்துவளர் பரியென்ருக்கிப் பாழ்நரியாம் எனதுகொடும் பான்மைமாற்ருய் - யான் இப்போது கொண்டுள்ள சுடுகாட்டில் மேயும் நரியின் தன்மையைத் தொலைத்து, உனது திருவாசகமாகிய தீனியைத்தின்னும் குதிரையாக என்னைமாற்றியருள்வாய். இது நூலாசிரியர் மணிவாசகனரிடம் வேண்டும் வரம். சிவபிரான் நரியைக் குதிரை ஆக்கியதுபோல் என்னை நீ மாற்றுவாய் என்பது இதன் கருத்து.

99. மன்னுமொரு முப்பதன்முன் - மன்னிய முப்பது ஆண்டுகட்கு (வயதுக்கு) முன்பே. மாய்த்து அப் பேற்றை - அந்த மந்திரிப்பதவியாகிய பேற்றினைத் தொலைத்து (விடுத்து). அரன் வாழ்த்திய - அரனை வாழ்த்திய. மாய்த்து, வீழ்த்தி, வாழ்த்திய என்று முடிக்க. என்பதவித் தளைதனையும் ஏசித்தள்ளி - நூலாசிரியர் தாம் வகித்திருந்த உத்தியோகத்தை விடுத்ததைத் குறிப்பிடுகிருர். குந்திமரங் கூடிடுவேன் - மரத்தினிடம் குந்திக் கூடிடுவேன்.

100. உயர்பரிதி எங்கெழில்என் - உயர்ந்த வானத்திலுள்ள சூரியன் எங்கே உதயமானுல் என்ன? "எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோர் எம்பாவாய்" என்ற திருவாசகத்தையும் நோக்குக.

Printed at the Sahdu Press, Royapettah, Madras
(P. I. C. No. M. S. 115) under clause 23
for Mr. K. M. Balasubramaniam, Madras-C. 650—28-9-46